Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

ஈகம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 23 (09 12 1991) திங்கட்கிழமை ஓசை 294

## அனுமதி அட்டை பெறாதோர்

### பணிப்பாளருடன் தொடர்புகொள்ளவும்

இதுவரை கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி அட்டைகள் கிடைக்காத தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாவட்டக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்புகொள்ளும்படி பரீட்சைப் பகுதி ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். நேற்றுமாலை இலங்கை வானொலிமூலம் விடுத்த அறிக்கையில் அவர் மேலும் கூறுகையில் பரீட்சைக் கட்டணம் செலுத்திய தபால் நிலையத்திணையும், கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு விண்ணப்பம் அனுப்பியமைக்கான பற்றுச்சீட்டு ஆகியவற்றை பணிப்பாளரிடம் காட்டி இலக்கமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

# பலாலியை விஸ்தரிக்க இராணுவம் முயற்சி:

# தடுத்து நிறுத்த புலிகள் தாக்குதல்

இலவச இணைப்பு 1982 தொடக்கம் மண்மீட்புக்காய் உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக் கப்பட்டுள்ளது

## அதிகாரப் பரவலாக்கலே முக்கிய விவகாரம் — பிரேமதாசா

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு அதிகாரப் பரவலாக்கலிலேயே சர்வ கட்சி மாநாடு கூடிய கவனம் செலுத்தி அதிகாரப் பரவல் தொடர்பான நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சுமுகமான செயற்பாட்டிற்கு உதவக்கூடிய முறையில் நடந்துகொள்ளவேண்டு மென்று சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா கேட்டுக் கொண்டார்.

கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் அனைவரையும் விளித்துப் பேசும்போதே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இவ் விவகாரமே இப்போது முக்கியத்துவமான விடயமாக

(4ஆம் பக்கம் பார்க்க)

## வலி.கிழக்கில் அகோர குண்டு வீச்சு

(நமது நிருபர்)

பலாலி விமான - இராணுவ தளத்தை விஸ்தரிக்கும் முகமாக முகாமின் கிழக்குப் புறமாக இராணுவம் பெரும்தாக்குதல் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இராணுவத்தின் இந்நடவடிக்கைக்கு உதவியாகக் கடும் குண்டுவீச்சுத் தாக்குதலை விமானப்படை விமானங்கள் மேற்கொண்டுவருகின்றன.

அதேவேளை இராணுவத்தினரின் இவ்விஸ்தரிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

பலாலி இராணுவ முகாமிலிருந்து இடைக்காடு, ஒட்டகப்புலம் பகுதியாகவும் முன்னேற முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று இரண்டாவது நாளாகவும் மோதல்கள் இடம்பெற்றன.

விடுதலைப்புலிகளின் கடும் எதிர்த்தாக்குதலால் இராணுவத்தினரின் முன்னேறும் முயற்சி தடைப்பட்டுள்ளன.

இந்நிலையில் இராணுவத்தினர் தூது நிலைகளில் இருந்து தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களையும் ஷெல் தாக்குதல்களையும் நடாத்தி வருகின்றனர்.

## மேஜர் இளங்கோ உட்பட 3 புலிகள் வீரச்சாவு

வலாய் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்தினருடன் இடம்பெற்ற மோதலில் மேஜர் இளங்கோ (கல்விபுரம் மன்மதநாதன் கப்புதூர்) 2-ம் லெப். சின்னத்தம்பி (கணபதிப்பிள்ளை சண்முகம் புலோலி மேற்கு) ஆகிய இருவரும் வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளனர்.

நேற்றுக் காலை நடந்த மோதலில் அன்ராஜ் (தம்பிராசா ஜெயசீலன் மண்டான்) வீரச்சாவைத் தழுவிக் கொண்டுள்ளார். இவர்களுக்கு விடுதலைப்புலிகள் வீர வணக்கம் செலுத்தியுள்ளனர்.

## மூன்று இராணுவம் பலி; மூவர் படுகாயம்

[கொழும்பு]

பலாலி இராணுவ முகாமின் சூழல் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே நேற்றும், நேற்று முன்தினமும் நடந்த மோதல்களில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் மூன்று இராணுவத்தினர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி லங்காபுவத் அறிவித்துள்ளது. இதேவேளை காயமடைந்தவர்களில் அதிகாரிகள் தரத்தைச் சேர்ந்தவர்களும் அடங்குவர் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

## ஜனாதிபதி ஆட்சியை வலுப்படுத்த பிரேமதாசா புதிய திட்டம்

(பொலநறுவை)

அடுத்த மூன்று ஆண்டுகளுக்கும், இரண்டாவது தவணைப் பதவிக்காலத்திலும் நிறைவேற்றுவதற்கான நீண்டகாலத் திட்டமுள்ள செயற்திட்டமொன்றைத் தான் ஏற்கனவே சமர்ப்பித்திருப்பதாக ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

இத்திட்டப் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை வலுப்படுத்த வழிவகைசெய்வதோடு மக்களால் தெரிவு செய்யப்படும் அடுத்த ஜனாதிபதி எத்தகைய பிரச்சினையும் இன்றி தமது கடமைகளைச் செய்வதற்கும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மஸ்கன் தொழிற்சாலை குண்டு வீச்சால் சேதம்

## வரி விளம்பரம்

### பயிற்சி வகுப்புகள்

ஆரம்ப ஆசிரியர், பயிலுனர் ஆசிரியர், பட்டதாரி ஆசிரியர் சேவை ஆகிய போட்டிப் பரீட்சைகளுக்கு 2 மாத கால பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 12-12-91 2.30 மணி பாடக்குறிப்புகள் இலவசம் முழுக்கட்டணம் 150/- மட்டுமே. School of Busi: css Adminislration 16, 3rd Cross Street Jaffna. (B/3595)

### வைத்தியம்

நீர்வேலியில் ஊர்காவற்றுறை வேலணை, புங்குடுதீவில் இயங்கிவந்த பாக்கியம் குமாரதாஸ் வைத்திய சாலை தற்காலிகமாக கல்லியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவிலுள்ள இருபாலைச் சந்தி குமாரபுரம் இல்லத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. பாக்கியம், ஊர்காவற்றுறை (R/1981)

## தமிழக கடலோரத்தில் எண்ணெய் வளம்

தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஒன்பது இடங்களில் எண்ணெய் மற்றும் நிலவாயு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

மத்திய பெற்றோலியத்துறை இணையமைச்சர் கிருஷ்ணகுமார் இதனைத் தெரிவித்தார். தென் ஆர்க்காடு, நாகைப்பட்டினம், இராமநாதபுரம், தஞ்சாவூர் புதுக்கோட்டை மாவட்டங்களில் எண்ணெய் கண்டு பிடிப்பதற்கான துரப்பண நடவடிக்கைகள் நடைபெற்றுவருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

---

யா/ வேம்படி மகளிர் கல்லூரி

199 - ஆண்டு 5

புலமைப்பரிசில் அடிப்படையில்

## ஆண்டு 7 அனுமதி 1992

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கு மட்டும் யா/ வேம்படி மகளிர் கல்லூரியில் 1992 ஆம் ஆண்டுக்குரிய ஆண்டு 7 வகுப்பில் அனுமதி வழங்கப் படவுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் கொண்டுவரும் போது புலமைப்பரிசில் பரீட்சை எடுத்த பாடசாலை அதிபரிடமிருந்து மாணவி புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, மாணவியின் சுட்டிலக்கம் என்பனவற்றையும் உறுதிப்படுத்திக் கொண்டு வரும்படி வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் 23.12.1991 க்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கவும்.

(B/3598) -அதிபர்

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 14 | 08 | 1974

வீரமரணம் 21 | 11 | 1990

### வீரவேங்கை நேசன்

### (குலசேகரம் முரளீதரன்)

கன்னித் தமிழ் காக்க  
அண்ணா! நீ போனதெங்கே  
காணாது அலைகின்றோம்  
கண்ணீரில் நாமெல்லாம்  
நெஞ்சமெல்லாம் கனக்குதடா  
நேசா உன் நினைவால்  
பார்க்கத் துடிக்கின்றோம்  
பாரினில் வாராயோ?

நீர்வேலி வடக்கு  
(B/3605)

பெற்றோர், அண்ணா, தம்பி, தங்கைமார்

---

உ  
சிவமயம்

## திருமண அழைப்பிதழ்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| சிவயோகநாதன் உத்தமன் | செல்லத்துரை மதிவதனா |
| LECTURER | DEMONSTRATOR |
| Uniko Computer Centre | Uniko Computer Centre |

காலம் : 11.12.91 காலை 10.40 - 12மணி

இடம் : மணமகள் இல்லம்  
தடுவாங்கலட்டி  
அளவெட்டி வடக்கு,  
அளவெட்டி.

வரவேற்புபசாரம்: மணமகன் இல்லம்: 13-12-91  
மணமகள் இல்லம்: 14-12-91

உங்கள் நல்வரவை நாடும்

திருமதி சி. சரஸ்வதியம்மாள் குடும்பத்தினர்  
தச்சம்புலம் (பன்னாலை பாடசாலை வீதி)  
தெல்லிப்பழை மேற்கு,  
தெல்லிப்பழை.

திரு. திருமதி செல்லத்துரை குடும்பத்தினர்  
தடுவாங்கலட்டி  
அளவெட்டி வடக்கு.  
அளவெட்டி.

[B/3599]

---

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

## விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்

காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



நினைவு

...ஆண்டு 7 வகுப்பில் அனுமதி வழங்கப் படவுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களைக் கொண்டுவரும் போது புலமைப்பரிசில் பரீட்சை எடுத்த பாடசாலை அதிபரிடமிருந்து மாணவி புலமைப்பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளி, மாணவியின் சுட்டிலக்கம் என்பனவற்றையும் உறுதிப்படுத்திக் கொண்டு வரும்படி வேண்டப்படுகின்றீர்கள். மேற்படி மாணவர்கள் பாடசாலை அலுவலகத்தில் 23.12.1991 க்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை ஒப்படைக்கவும்.

(B/3598) -அதிபர்

---

## வீரவேங்கை நேசன்

### (குலசேகரம் முரளீதரன்)

கன்னித் தமிழ் காக்க
அண்ணா! நீ போனதெங்கே
காணாது அலைகின்றோம்
கண்ணீரில் நாமெல்லாம்
நெஞ்சமெல்லாம் கனத்திருக்க
நேசா உன் நினைவால்
பார்க்கத் துடிக்கின்றோம்
பாரினில் வாராயோ?

நீர்வேலி வடக்கு
(B/3605)

பெற்றோர், அண்ணா, தம்பி,
தங்கைமார்

---

ஸ்ரீதர் திரையரங்கில்

அல்ஜீரிய நாட்டு

# விடுதலைப் போராட்டம்

[தமிழாக்கம் செய்யப்பட்டது]

தினசரி 4.00 மணிக்கும்

சனி, ஞாயிறுகளில் 4, 6 மணிக்கும்
காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன

(B/3564)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### தியாகராசா மன்மதராசா

[அன்ரன்]

வீரஜனனம் 12-08-1967

வீரமரணம் 09-12-1987

எங்கு நீ சென்று விட்டாய்
எம்மை ஏன் மறந்து விட்டாய்?
மங்கிய ஒளியில் நின்று
மருண்டு நாம் வாழும் வேளை
செங்கதிர் மலர்ந்து உந்தன்
சிறு முகம் சிரிக்குமன்றோ
பொங்கிடும் தமிழால் உன்னை
பாடிட வார்த்தை ஏது?


'மன்மதராசா வீதி'
தாவடி தெற்கு,
கொக்குவில்.

உன் பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, அண்ணன்மார்
அக்காமார், தம்பி, தங்கை,
அத்தான்மார், அண்ணி, பெறாமக்கள்

(B/1980)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம் 02-08-61

வீரமரணம் 09-12-87

### கப்டன் பாரத்

[தேவராஜா]

பாரதத்தின் துரோகத் தனம்
"பாரத்" நீ கண்டு பொங்கிய வேளை
உன்னைப் புதுப் பொலிவுடன்
புத்தம் புது வேங்கை வீரனாக்கத்
தமிழீழ அன்னை தன் கருவறைக்குள்
அழைத்து அந்நாளை
நம் நெஞ்சில் நிறைந்து
உன் இலட்சியம் வெல்லும்
என்ற உறுதி கூறி நிற்கிறோம்.

உன் பாசத்துடன்
அன்னையும், அண்ணன்
குடும்பத்தினரும்.

பாரத் வீதி,
மானிப்பாய்.

(B/3582)

---

# நினைவு கூருகின்றோம்... 1991 - 12 - 09

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை, பச்சனூர்ப் பகுதியில் ரோந்தில் வந்த சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச் சாவு எய்திய

**லெப். ரங்கன்** (பேச்சிமுத்து விமலநாதன் கன்னிமேடு திருக்கோணமலை)

திருக்கோணமலை பேராற்றுப்பகுதியில் எமது முகாம் ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவெய்திய

**பவான்** (திருக்கோணமலை)

1987 ஆம் ஆண்டு கொக்குவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது சயனைற் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**கப்டன் பாரத்** (நடராசா தேவராசா பாரத் வீதி, மானிப்பாய்)

இதே ஆண்டு உடுவிலில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**அன்ரன்** (தியாகராஜா மன்மதராஜா பாடசாலை ஒழுங்கை, தாவடி தெற்கு)

1988 ஆம் ஆண்டு ஓந்தாச்சிமடத்தில் எமது முகாமொன்றை இந்தியப்படையினர் சுற்றிவளைத்த போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**2-ம் லெப். சிவா** (அருளம்பலம் சிவஞானம் களுதாவளை, மட்டக்களப்பு)

தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ். காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த மனோகரனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவன்.

1989 ஆம் ஆண்டு முதூரில் காவியம் காரணமாக எம்மை பிரிந்த

**திலீப்** (கா. கருணாநிதி, 40 ஆம் கிராமம், அம்பாறை)

யாழ். குடாநாட்டில் பரவலாக இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட எமது ஆதரவாளர்கள் 13 பேர்.

1990 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, கல்லடிப்பகுதியில் தேச விரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட வங்கி ஊழியரான தமிழ்ப்பொது மகன்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட அங்காடி வியாபாரியான தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3603)

## சிந்தனைக்கு

அநீதியைத் தாங்குபவனை விட,
அநீதி இழைப்பவனே
என்றும் அதிகம் அவதியுறுவான்.

— பிளேட்டோ


ஈழநாதம்

மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 09-12-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05


# சமாதான முயற்சிக்கு அரசாங்கம் ஆப்பு

'வடக்கு - கிழக்குப் பகுதியில் சமாதானத்தையும், ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வருமாறு எப்பொழுதும் விடுதலைப் புலிகளைக் கேட்டு வந்துள்ளேன்'. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வவுனியாவில் நேற்று முன்தினம் பேசிய கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூடியதாக உருவாகி வந்த நல்லெண்ணச் சூழ்நிலைக்கு அரச ஆப்பு வைத்துள்ளது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எங்கே? எப்பொழுது சந்திப்பது எனப் புலிகளுக்குக் கடிதம் எழுதியிருந்த தொண்டமான், 10ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்த புலிகள் வருமாறு அழைத்த போது, அதற்கு சம்மதம் தெரிவிக்காமல் யாழ். வருகையை ஒத்திப் போட்டுள்ளார்.

திரு. தொண்டமானின் சமரச முயற்சி அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் உருவானதோ அன்றி தொண்டமானின் தனித்துவமானதாகவோ இருப்பினும், தொண்டமானின் யாழ். வருகை பிற்போடப்பட்டமைக்கு சமாதான முயற்சிக்கு அரசாங்கத்தரப்பில் இருந்து எழுந்த முட்டுக்கட்டையே காரணம் என்பதில் ஐயமில்லை. தொண்டமான் குறிப்பிட்டுள்ளது போன்று சார்க் மாநாடு அதற்குக் காரணமல்ல.

இதேவேளை, யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 சிறிலங்கா பொலிஸாரை அவர்கள் உறவினர்கள் வந்து பார்ப்பதற்கு அரசாங்கம் வழங்கியிருந்த அனுமதியை, வடக்கின் தற்போதைய சூழ்நிலையைக் காரணங்காட்டி முப்படைகளின் நடவடிக்கை கூட்டுத் தலைமையகம் திடீரென ரத்துசெய்துள்ளது. விடுதலைப் புலிகள் மனிதாபிமான ரீதியிலாகவும், நல்லெண்ண ரீதியிலும் மேற்

# ஆதர் பீல்ட் சுவீகரிப்பிற்கு தொண்டமான் ஆட்சேபம்

(பதுளை)

அவிசாவளைப் பகுதியிலுள்ள ஆதர்பீல்ட் தோட்டத்தை சுவீகரிக்கும் பெருந்தோட்டத்துறை அமைச்சின் செயலானது இலங்கைத் தொழிலாளர் காங்கிரசிற்கும் தோட்டத் தொழிற்துறை அமைச்சுக்கும் இடையிலான ஒப்பந்தத்தை மீறும் செயலாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தோட்டத்தை சுவீகரிக்க பெருந்தோட்டத்துறை அமைச்சு முடிவு எடுத்ததை அடுத்தே இ. தொ. கா. சார்பில் இவ்வாறு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்ததை அடுத்தே இத்தோட்டம் சுவீகரிக்க முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கையினால் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து இ. தொ. கா. தலைவர் எஸ் தொண்டமான் பெருந்தோட்டத்துறை அமைச்சருக்கு தனது ஆட்சேபனையைத் தெரிவித்து கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அவிசாவளை ஆதர் பீல்ட் தோட்டம் 360 ஏக்கர் கொண்ட இடமாகும். இதனை சுவீகரிப்பதன் மூலம் அத்தோட்டத்தை மாத்திரமல்ல சுற்றுப்பகுதிகளிலும் அமைதியின்மையை ஏற்படுத்தும் அபாயத்தை உருவாக்குகிறீர்கள். இதனால் இப்பகுதியில் பல அனர்த்தங்கள் விளையக்கூடும். ஆகவே சுவீகரிப்பு திட்டத்தை உடன் நிறுத்தி வைக்கவும்.

அத்துடன் மேற்படி தோட்டத்தொழிலாளர் குடும்பங்களுக்கு தக்க பாதுகாப்பும், மாற்று இட வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கும் வரை இத்திட்டத்தை நிறுத்தவும் என்றும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# பூநகரி தபாலகம் இடம்மாற்றம்

(பூநகரி)

பூநகரித் தபாலகம் கடந்த வெள்ளி முதல் உருத்திரபுரம் உப தபாலகத்திற்கு தற்காலிகமாக இடம் மாற்றப்பட்டுள்ளதாக அதன் அஞ்சல் அதிபர் அறிவித்துள்ளார்.

கடந்த ஐப்பசி மாதம் இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சால் மேற்படி தபாலகம் பலத்த சேதமடைந்துள்ளது. இதனாலேயே தபால் விநியோகம் உருத்திரபுரத்திற்கு மாற்றப்பட்டுள்ளதெனவும் அவர் தெரிவித்தார். (ச)

# வெள்ளை மாளிகை பிரதம அதிகாரியாக போ.வ. அமைச்சர் தெரிவு

(வாஷிங்டன்)

அமெரிக்க போக்குவரத்து அமைச்சர் சாமுவேல் ஸ்கின்னர் வெள்ளை மாளிகையின் பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற திருப்பர்களின் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

முன்னதாக வெள்ளை மாளிகையின் உயர் அதிகாரியாக இருந்த ஜோன் சுனுனு ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

இதே நேரம் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் புஷ்ஷுக்கு எதிராக ஜனநாயகக் கட்சியிலிருந்து ஆறு பேர் போட்டியிட உள்ளனர்.

# மகனை அலவாங்கால் குத்திய தந்தை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக தந்தை மகனின் மார்பில் அலவாங்கால் குத்தினார். மகன் ஆபத்தான நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நீண்ட நாட்களாக இவர்களிருவருக்குமிடையே தகராறு இருந்து வந்ததாகவும், சம்பவதினமான நேற்று முன்தினம் இவர்களிடையே ஏற்பட்ட தகராறு முற்றவே தந்தை அலவாங்கால் மகனின் மார்பில் குத்தினாராம். இச்சம்பவம் நேற்று முன்தினம் சித்தன்கேணிப் பகுதியில் நடைபெற்றது. (ச)

பருத்தித்துறை

# மெதடிஸ் மாணவிகளுக்கு அவுஸ். புலமைப்பரிசில்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி மாணவிகள் மூவருக்கு அவுஸ்திரேலியா சென்று கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் 1992ல் ஆரம்பிக்கும் கல்வியாண்டில் அவுஸ்திரேலியாவில் கல்வியை ஆரம்பிக்கவுள்ளனர்.

பொறியியல் துறையில் செல்வி தேவகோபினி தேவராஜாவுக்கும், மருத்துவத் துறையில் செல்வி வாசுகி கணபதிப்பிள்ளைக்கும் மருத்துவத்துறையில் செல்வி சிவரூபிணி சுப்பிரமணியத்திற்கும் அவுஸ்திரேலியா புலமைப்பரிசில்கள் கிடைத்துள்ளன. (25)

# மனிதனுக்கும் பொருந்தும்

# தாஜ்மகாலைப் பார்வையிட பத்து டொலர் கட்டணம்

(டில்லி)

உலகின் அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைப்பார்வையிட வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பத்து டொலர் கட்டணம் செலுத்த வேண்டுமென இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்திட்டத்தை தாஜ்மகால் அமைந்துள்ள ஆக்ரா நகர அதிகாரிகளே முடிவு எடுத்துள்ளனர். இதுவரை இதனைப் பார்க்க இந்திய ரூபாய் இரண்டு மட்டுமே வசூலிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பணத்தின் மூலம் தாஜ்மகாலுக்குச் செல்லும் வீதிகளைப் பராமரிக்கலாம் என்று ஆக்ரா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வறிய நாடுகளில்

# கர். தாய்மாரின் இறப்பு ஒருவருடத்திற்கு 5,00,000

(ஜெனீவா)

வறிய நாடுகளில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு வருடாந்தம் 5,00,000க்கும் அதிகமென உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்கள் கர்ப்பமுறும் ... பேற்றின் போது இறக்கின்றார்கள் என்றும்.

ஆபிரிக்க சஹாரா பாலைவனப் பகுதியிலேயே கூடுதலான மரணங்கள் ஏற்படுவதாக ஆய்வு மூலம் தெரியவந்துள்ளதாகவும் இந்த நிற

ஐக்கியத்தையும் ஏற்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முன்வருமாறு எப்பொழுதும் விடுதலைப் புலிகளைக் கேட்டு வந்துள்ளேன்'. இவ்வாறு சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா வவுனியாவில் நேற்று முன்தினம் பேசிய கூட்டத்தில் தெரிவித்தார்.

இதேவேளை இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்தக் கூடியதாக உருவாகி வந்த நல்லெண்ணச் சூழ்நிலைக்கு அரசு ஆப்பு வைத்துள்ளது. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக எங்கே? எப்பொழுது சந்திப்பது எனப் புலிகளுக்குக் கடிதம் எழுதியிருந்த தொண்டமான், 10ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்த புலிகள் வருமாறு அழைத்த போது, அதற்கு சம்மதம் தெரிவிக்காமல் யாழ். வருகையை ஒத்திப் போட்டுள்ளார்.

திரு. தொண்டமானின் சமாதான முயற்சி அரசாங்கத்தின் ஆலோசனையின் பேரில் உருவானதோ அன்றி தொண்டமானின் தனித்துவமானதாகவோ இருப்பினும், தொண்டமானின் யாழ். வருகை பிற்போடப்பட்டமைக்கு சமாதான முயற்சிக்கு அரசாங்கத்தரப்பில் இருந்து எழுந்த முட்டுக்கட்டையே காரணம் என்பதில் ஐயமில்லை. தொண்டமான் குறிப்பிட்டுள்ளது போன்று சார்க் மாநாடு அதற்குக் காரணமல்ல.

இதேவேளை, யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள 41 சிறிலங்கா பொலிஸாரை அவர்கள் உறவினர்கள் வந்து பார்ப்பதற்கு அரசாங்கம் வழங்கியிருந்த அனுமதியை, வடக்கின் தற்போதைய சூழ்நிலையைக் காரணங்காட்டி முப்படைகளின் நடவடிக்கை கூட்டுத் தலைமையகம் திடீரென ரத்துசெய்துள்ளது. விடுதலைப் புலிகளால் மனிதாபிமான ரீதியிலானதும், நல்லெண்ண ரீதியிலும் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு கூட்டுப்படைத் தலைமையகம் விதித்த தடையானது சிங்கள மக்கள் மத்தியில் தமிழர் தொடர்பாக ஓர் புரிந்துணர்வும், தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கையை சிங்களப் பொதுமக்கள் புரிந்து கொள்ளக் கூடாது என்பதுமேயாகும். இதை விடுத்து பாதுகாப்புப் பிரச்சினைகளோ அன்றி வேறு எதுவுமோ காரணமல்ல.

அதாவது தொண்டமானின் யாழ். குடாநாட்டு விஜயம், சிங்கள மக்களின் யாழ். வருகை என்பனவற்றால், உருவாகி வந்த ஒரு சமாதான சூழலை அரசாங்கம் திட்டமிட்டுக் கெடுத்துள்ளது. இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைக் காண முற்பட்டுள்ளது. இதனால் இனப் பிரச்சினை தற்போதைக்கு தீருவதற்கான அறிகுறிகளே இல்லாமல் செய்துள்ளது.

சிறிலங்கா அரசாங்கம் எப்பொழுதும் இனப் பிரச்சினை தொடர்பாக சமாதான தீர்விற்கோ அன்றி விட்டுக் கொடுப்பிற்கோ தயாராக இல்லை. பேச்சளவிலேயே சமாதானத் தீர்வு தொடர்பாக குறிப்பிட்டு வந்தது. அதேவேளை சிறிலங்கா அரசாங்கத்தின் அகராதியில் பேச்சுவார்த்தை என்பது சிங்கள பேரினவாத சக்திகள் போடும் பிச்சையை தமிழர் தரப்பு இரு கையேந்தி ஏற்க வேண்டுமென்பதாகும்.

இதன் வெளிப்பாடே சர்வகட்சி மாநாட்டின் மூலம், பாராளுமன்றத் தெரிவுக்குழு மூலம் எட்டப்படும் தீர்வை தமிழர் தரப்பு ஏற்க வேண்டும் என்ற வற்புறுத்தலாகும்

பேரினவாத சிங்களக்கட்சிகளையும் அங்கத்தவர்களையும் பெரும்பான்மையாகக் கொண்ட இந்த இரு அமைப்புக்களினாலும் தமிழினத்தைத் திருப்திப்படுத்தக் கூடிய தீர்வைக் கண்டு விட முடியாது. இந்த அமைப்புக்களினாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்றால், இந்தக் கட்சிகளை பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்றத்தினாலும், கடந்த காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டிருக்க முடியும். அதே வேளை தமிழர் தரப்பிலும் இனப் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தாமல் தமது பிரச்சினையைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாலும், அயல் நாடுகளின் தேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாலும் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது.

## மகனை அலவாங்கால் குத்திய தந்தை

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு காரணமாக தந்தை மகனின் மார்பில் அலவாங்கால் குத்தினார். மகன் ஆபத்தான நிலையில் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: நீண்ட நாட்களாக இவர்களிருவருக்குமிடையே தகராறு இருந்து வந்ததாகவும், சம்பவதினமன நேற்று முன்தினம் இவர்களிடையே ஏற்பட்ட தகராறு முற்றவே தந்தை அலவாங்கால் மகனின் மார்பில் குத்தினாராம். இச்சம்பவம் நேற்று முன்தினம் சித்தன்கேணிப் பகுதியில் நடைபெற்றது. (ச)

பருத்தித்துறை

## மெதடிஸ் மாணவிகளுக்கு அவுஸ். புலமைப்பரிசில்

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி மாணவிகள் மூவருக்கு அவுஸ்திரேலியா சென்று கல்வி கற்பதற்கான புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மூவரும் 1992ல் ஆரம்பிக்கும் கல்வியாண்டில் அவுஸ்திரேலியாவில் கல்வியை ஆரம்பிக்கவுள்ளனர்.

பொறியியல் துறையில் செல்வி தேவகோபினி தேவராஜாவுக்கும், மருத்துவத் துறையில் செல்வி வாசுகி கணபதிப்பிள்ளைக்கும் மருத்துவத்துறையில் செல்வி கௌரி சிசுப்பிரமணியத்திற்கும் அவுஸ்திரேலியா புலமைப்பரிசில்கள் கிடைத்துள்ளன. (25)

## மனிதனுக்கும் பொருந்தும் பன்றி இருதய குழாய்கள்

பன்றிகளின் இருதயக்குழாய்களை மனிதருக்கும் பொருத்தும் வகையிலான புதிய மருத்துவதொழில் நுட்பத்தை தமிழ் நாட்டில் நடைமுறை மருத்துவ விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தப் பண்ணைக் கழகத்தின் துணைவேந்தர் ரிச்சேட் மசிலாமணி சட்டக்கல்லூரி விழா மண்டபத்தில் சென்னையில் நடந்த ரசிகர் ஒன்றில் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

இந்தப் புதிய மருத்துவ தொழில் நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டதைதொடர்ந்து இந்தியாவில் சுமார் 25,000 ரூபாவாக இருக்கும் இருதய மாற்று அறுவைச் சிகிச்சையின் செலவு 5,000 ரூபாவாகக் குறையும் என்று அவர் கூறினார்.

## எதுவரினும் சுதந்திரத்தை விற்க மாட்டோம்

-பிரேமதாசா

(கொழும்பு)

''இந்த நாட்டின் வெளிநாட்டுக் கொள்கையில் ஐந்து அடிப்படை அம்சங்கள் உள்ளன. இவற்றை இந்த நாடு ஏற்றுக் கொள்வதனால் எமது சுதந்திரத்தை எது வரினும் எவருக்கும் விற்கமாட்டோம்'' என சிறிலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வெளி விவகார கற்கை நெறி பட்டமளிப்பு விழாவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

''சமாதானத்தை விரும்பும் சகல நாடுகளுடனும் நட்புறவு, சர்வதேசவிதிகளை அனுசரித்தல், நாட்டின் இறைமை, சுதந்திரம் என்பவற்றை பாதுகாத்தல் என்பன மீறப்படக் கூடாது. எமது சுதந்திரத்தையோ தேசிய கௌரவத்தையோ அடகு வைத்து அபிவிருத்தி காண்பதில் எமக்கு நம்பிக்கை இல்லை. அபிவிருத்தியில் சகல மக்களும் பங்குபற்ற வேண்டும் என்பது இந்த ஜனநாயக அரசின் குறிக்கோளாகும்''

''எமது சுதந்திரம் சிலருக்கு சங்கடத்தைக் கொடுக்கலாம்; எமது தனித்துவமும் நாணயமும் வேறு சிலரை சங்கடப்படுத்தலாம். ஆயினும் நாங்கள் உறுதியாக இருப்போம். வெளியாரினாலோ அல்லது உள்நாட்டினராலோ ஏமாற்றப்பட இலங்கை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள்''

''நிலைப் பிரபுத்துவத்திலும் உயர்குழு மனப்பான்மையிலும் நம்பிக்கை கொண்டவர்கள் இதனை ஏற்றுக் கொள்ள சங்கடப்படுவார்கள்'' என அவர் தெரிவித்துள்ளார்.

புஷ் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற திருபர்களின் மாநாட்டில் அவர் ...

... புஷ்ஷுக்கு எதிராக ஜனநாயகக் கட்சியிலிருந்து ஆறு பேர் போட்டியிட உள்ளனர்.

## தாஜ்மகாலைப் பார்வையிட பத்து டொலர் கட்டணம்

(டில்லி)

உலகின் அதிசயங்களில் ஒன்றான தாஜ்மகாலைப்பார்வையிட வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் பத்து டொலர் கட்டணம் செலுத்த வேண்டுமென இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தக்கட்டணத்தை தாஜ்மகால் அமைந்துள்ள ஆக்ரா நகர அதிகாரிகளே முடிவு எடுத்துள்ளனர். இதுவரை இதனைப் பார்க்க இந்திய ரூபாய் இரண்டு மட்டுமே வசூலிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இப்பணத்தின் மூலம் தாஜ்மகாலுக்குச் செல்லும் வீதிகளைப் பராமரிக்கலாம் என்று ஆக்ரா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வறிய நாடுகளில்

## கர். தாய்மாரின் இறப்பு ஒருவருடத்திற்கு 5,00,000

(ஜெனீவா)

வறியநாடுகளில் கர்ப்பிணித் தாய்மாரின் இறப்பு வருடாந்தம் 5,00,000 க்கும் அதிகமென உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவர்கள் கர்ப்பமுறும் காலத்திலோ அல்லது பிள்ளைப் பேற்றின் போதோ இறக்கின்றார்கள் என்றும்.

ஆபிரிக்க சஹாரா பாலைவனப் பகுதியிலேயே கூடுதலான மரணங்கள் ஏற்படுவதாக ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளதாகவும் இந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

## குண்டு வீச்சு, ஷெல் தாக்கு ஏழு பேர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்காப்படையினரது விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல் தாக்குதல்களினால் ஏழு பொது மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

நேற்று முன்தினம் அச்சுவேலி, கதிரிப்பாயிலும், இடைக்காடு, பத்தமேனி ஆகியபகுதிகளிலும் சிறிலங்கா விமானப்படையினரினதும் இராணுவத்தினரதும் தாக்குதல்களினால் இவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். சின்னத்தி நாகமுத்து (வயது 80) மாணிக்கண்டு (வயது 55), பொன்னர் செல்லையா (வயது 80, ஆகியோர் உட்பட தம்பாலை, வளலாய் ஆகிய பகுதிகளில் ஒரு ஆணும், பெண்ணும் சாவகச்சேரிப்பகுதியில் மரணமடைந்துள்ளனர். மேலும் ஒரு அடையாளம் காணப்படாத ஒருவரும் மரணமடைந்துள்ளார்.

அதேவேளை உரும்பிராய் பகுதியில் நடைபெற்ற குண்டு வீச்சுத்தாக்குதலில் சந்திரனம் இராசதுரை (வயது 68) என்பவர் மரணமடைந்துள்ளார்.

மேற்படி தாக்குதல்களில் ஒன்பது பேர் காயமடைந்திருக்கின்றனர்.

## வெள்ளோட்ட விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கல்வயல் வேதவினாயகர் ஆலயத்தின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா எதிர்வரும் புதன் கிழமை பன்று நடைபெறவுள்ளது. சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் சிதம்பரநாதக் குருக்கள் ஆசியுரை வழங்க, க. நாகேஸ்வரன் (விரிவுரையாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) இ. ஜெயராஜ் (அமைப்பாளர் கம்பன் கழகம்) ஆகியோர் பாராட்டுரை வழங்கவுள்ளனர்.

## மீளச் செலுத்த கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசியவீடமைப்புத்திணைக்களத்தில் கடன்பெற்றவர்கள் இவ்வாண்டு முடிவதற்கிடையில் மீளச் செலுத்துமபடி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இவ்வாண்டு முடிவடைவதற்கு முன்னர் கடனை மீளச் செலுத்துபவர்களுக்கு சில சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. முழுத் தொகையையும் செலுத்துமிடத்து 10வீதக் கழிவு வழங்குவதுடன் தண்டப்பணமும் அறவிடப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# இந்திராவை ஒத்த முயற்சியில் நாமும் ஈடுபட்டுள்ளோம் -லலித்

(அளிசாவெல)

இந்திரா காந்தி காங்கிரஸி லிருந்து வெளியேற்றப்பட்டதும் அவர் இந்திரா காங்கிரஸ் கட்சியை உருவாக்கினார். தொண்ணூறு வீதமான காங்கிரஸ்காரர்கள் இந்திரா காங்கிரஸில் இணைந்து கொண்டார்கள். அடுத்து வந்த பொதுத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் வெற்றி பெற்றதோடு பழைய காங்கிரஸின் விலாசமும் இல்லாது போய்விட்டது. நாமும் அப்படியான ஒரு முயற்சியில் தான் இறங்கியுள்ளோம். வாழைத்தோட்டக் கோஷ்டியிலிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் முயற்சியிலேயே நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு அளிசாவெலவில் கூட்டமொன்றில் பேசும் போது லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

1978 இல் நான் ஐ.தே. கட்சியை ஆதரித்த போது இனங்களுக்கிடையிலான உறவுகளைக் கட்சி பலப்படுத்தும் என்று நினைத்தேன். ஆனால் 12 வருட அனுபவத்துக்குப் பிறகு நிலைமை வேறு மாதிரியாக மாறியிருப்பது புலனாகிறது.

உண்மையில் இப்பிரச்சினை மோசமாகியுள்ளது. ஜனநாயகம் மற்றும் மனிதவுரிமைகளுக்கான போராட்டம் சிங்களவர்களை மாத்திரமல்ல இலங்கையில் வாழும் மற்ற இனங்களையும் பாதிக்கும். கட்சியில் ஒருவரும் பேசமுடியாது. கட்சியில் ஒருவரின் குரல்தான் ஒலிக்கிறது. ஒரு தனிமனிதனிடம்தான் அனைத்து அதிகாரங்களும் உள்ளன.

இவ்வாறு லலித் அத்துலத்முதலி மேலும் தெரிவித்தார்.

## வவுனியா நகர்ப்பகுதியில் வீடுவீடாகச் சோதனை

(வவுனியா)

வவுனியா நகரமும் அதனைச் சூழவுள்ள கிராமப் பகுதிகளும் வெள்ளிக்கிழமை அதிகாலை சிறிலங்கா இராணுவத்தின் முற்றுகைக்கு உட்படுத்தப்பட்டு வீடுவீடாக சோதனை நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

குடும்பத் தலைவர்களை மட்டும் வீடுகளில் இருக்கும் படி ஒலிபெருக்கியால் அறிவித்த சிறிலங்கா இராணுவத்தினர் ஏனையோரை பாடசாலை, ஆலயம் போன்ற பொது இடங்களுக்குச் செல்லுமாறு பணித்த பின்னர் வீடு வீடாகச் சோதனையிட்டனர் என்றும் சனிக்கிழமை காலை 9.30 மணிவரை இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், ஆனாலும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## பொலிஸ் - எதிர்க்கட்சியினர் கேரளத்தில் மோதல்

[திருவனந்தபுரம்]

கேரள மாநிலத் தலைநகரமான திருவனந்தபுரத்தில் சி.பி.ஐ.(எம்) கட்சியின் தலைமையலுவலகம் கேரளகாவல் துறையினரால் தாக்கப்பட்டதை அடுத்து காவல் துறையினருக்கும், கேரள எதிர்க்கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த மோதலில் நான்கு பொலிசார் உட்பட பலர் காயமுற்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதே நேரம் சி.பி.ஐ (எம்) தலைமையகம் தாக்கப்பட்டதைக் கண்டித்து நாளை செவ்வாய்க் கிழமை கேரள மாநிலத்தில் 'பந்த்' நடைபெற உள்ளது.

### புலிகளுடன்

ஒலுவைச் சிங்கம்தான் ஒழுங்கு செய்திருப்பதாகவும், ஆகவே குறைந்தது ஒத்து நாட்களாவது பயணஒழுங்குகளை மேற்கொள்ள தேவைப்படும் என்றும் தொண்டமான் தெரிவித்தார்.

தைப்பொங்கலை முன்னிட்டு வட-கிழக்கு மாகாணத்தில் யுத்த நிறுத்தமொன்றை அரசாங்கம் செய்யுமா என தொண்டமானை நிருபர் கேட்டபோது அதனை இப்பொழுதே கூறமுடியாது என்றும் தொண்டமான் தெரிவித்தார்.


உங்கள் குழந்தைகளை
எங்களிடம் ஒப்படையுங்கள்



92ஆம் ஆண்டிற்கான
புதியபிரிவு


## சிற்றூரவை தலைவர்கள் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அனைத்து சிற்றூரவைத் தலைவர்களுக்குமான மாதாந்தக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை (10.12.91) நடைபெற உள்ளது.

இக்கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற உள்ளதாகவும் யாழ். மாவட்ட அனைத்து சிற்றூரவைகளின் சகல உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படியும் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யாழ். மாவட்டச் செயலகம் அறிவித்துள்ளது.

## பரீட்சைக்கான சூழல் உருவாக்க வேண்டும் - வடமாநில கல்விப் பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பரீட்சையை திறம்பட நடாத்தவும், மாணவர்கள் பதற்றமின்றி இப்பரீட்சையில் தோற்றவதற்கு வசதியாகவும் இம்மாவட்டத்தில் பரீட்சைக்கான உகந்த சூழ்நிலையை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பரீட்சை ஆணையாளரைக் கேட்டிருக்கிறார்.

நேற்று அனுப்பி வைக்கப்பட்ட அவசர வானொலிச் செய்தியில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

இன்று ஆரம்பமாகும் க.பொ.த.சாதாரண தர பரீட்சை பரீட்சை விதிகளின் படி ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடாத்துவதற்கு இம்மாவட்டத்திலுள்ள பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் ஒத்துழைக்கும் படியும் கல்விப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். (ஈ)

## சனிக்கிழமை பரீட்சை வினாத்தாள்களும் வந்தன

க.பொ.த [சா.த பரீட்]சையில் சனிக்கிழமை நடக்க வேண்டிய பாடங்களுக்கான வினாத்தாள் பொதிகளும் வந்துள்ளன என்று யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

நேர சூசிகையின்படி வர்த்தகமும் கணக்கியலும் மற்றும் சுட்டெண் 6 ஆம் நாள் சனிக்கிழமை நடைபெற வேண்டிய பாடங்களாகும்.

மற்றும்படி அச்சுவேலிசென் திரேசா, அச்சுவேலி மகா வித்தியாலயங்களில் முன்பு அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்கள் நீர்வேலிக்கும், சிறுப்பிட்டிக்கும் மாற்றப்பட்டுள்ளன. இந்த இரு இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் எந்தப் பள்ளிக்கூடங்களில் அமையும் என்பதை செய்தி அச்சுக்குப் போகும்வரை யாழ் கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்படவில்லை.

### பிரிட்டன்

றும், தொடர்ந்தும் நிதி, தொழில் ஆகிய இருதரப்பு உதவிகளையும், பிராந்திய

### நிமால்

## மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவம் அடாவடித்தனம் தீவைப்பு, மாணவர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்தினம் காலை வெளியேறிய இராணுவத்தினர் மாவடிச்சேனை என்ற கிராமத்தைச் சுற்றி வளைத்து நூறுக்கும் மேற்பட்ட தமிழ் மக்களைப் பிடித்துச் சென்றுள்ளனர். இவர்களனைவரும் இராணுவத்தால் துன்புறுத்தப்பட்டனரெனவும், இவர்களில் இரண்டு ஆண்களும், மூன்று மாணவிகளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனரெனவும் அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை 19-ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து முன்னேறி வந்த இராணுவத்தினர் நெடுஞ்சேனை, ஓதியன்குடா ஆறு, கண்டசேனை, அடச்சகல் ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்து ஏழு பத்து ஐந்திற்கும் மேற்பட்ட வீடுகளைத் தீ மூட்டி எரித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அப் பகுதியில் உலங்கு வானூர்தி ஒன்று தொடர்ந்து இரண்டு மணி நேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளது. இப் பகுதியில் றொக்கட், மோட்டார் தாக்குதலும், 19-ம் கட்டை முகாமிலிருந்து எறிகணைத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## ரயில் விபத்தில் 24 பேர் பலி

(சிம்லா)

ஹிமாலயப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ரயில் விபத்தொன்றில் 24 பேர் உயிர் இழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதினெட்டுப் பேர் விபத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும், மீதி ஆறு பேரும் மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## மாணவர்கள் அவதி

(யாழ்ப்பாணம்)

அனுமதி அட்டைகள் கிடைக்காமையால் நூற்றுக்கணக்கான மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலையில் உள்ளனர்.

சுமார் 300 தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கே இவ்வாறு அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை. இவர்களுக்கு வழங்குவதற்கு மேலதிக அனுமதி அட்டைகளை அனுப்பி

